**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திரு. M. சண்முககனி, பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை**
**2025ம் வருடம் அக்டோபர் மாதம் 13ம் நாள் திங்கட்கிழமை**
**இடைக்கால மனு எண்.9/2024**
**இன்**
**அசல் வழக்கு எண்.105/2022**

அழகிச்சி ..மனுதாரர்/4ம் பிரதிவாதி

..எதிர்..

1. ஜானகி
2. சுதந்திரம்
3. கருப்புச் சாமி
4. மணிகண்டன்
5. பஞ்சராஜா
6. செல்வி
7. ஆறுமுகம்
8. முருகன் ..1 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
9. நாகம்மாள்
10. கருப்புச்சாமி
11. அய்யம்மாள் ..9, 10, 11 எதிர்மனுதாரர்கள்/D1, D2, D3
12.அன்னலெட்சுமி
13. மூக்காயி
14 அழகிச்சி

..12, 13, 14 எதிர்மனுதாரர்கள்/D5, D6, D7

இந்த மனுவானது இறுதி விசாரணைக்காக 19.09.2025–ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.முத்துராமலிங்கம் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. நாகரத்தினம் அவர்கள் முன்னிலையாகியும், 9 மற்றும் 13ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.முத்துராமலிங்கம் அவர்கள் முன்னிலையாகியும், 10ம் எதிர்மனுதாரர்

தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.சுப்பராயன் அவர்கள் முன்னிலையாகியும், 11ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. SPT.சேதுராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 12 மற்றும் 14ம் எதிர்மனுதார்களுக்கு எதிராக அசல் வழக்கில் ஒருதலைப்பட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான

**உத்திரவு**

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் போன காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொண்டு உத்திரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 3 மற்றும் பிரிவு 151 சிபிசி–யின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:**

இந்த மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு 2வது சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அப்போது தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் போக இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணம் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும் மேற்படி ஆவணம் அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணமாக உள்ளதால் மேற்படி ஆவணத்தை கால தாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து உத்திரவிட வேண்டியது அவசியமாக உ ள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) 1 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்:**

மனு பாரா 2ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அசல் வழக்கை காலதாமதப்படுத்துவதற்காக பொய்யாக சொல்லப்பட்ட சங்கதிகள் என்றும்

இந்த மனுதாரர் ஏற்கனவே விசாரணை செய்யப்பட்டு அதற்கான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அசல் வழக்கின் 2ம் பிரதிவாதி ஆவணங்களை குறியீடு செய்யாமல் இருந்துவிட்டு இவ்வழக்கினை திசை திருப்புவதற்காகவும் நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதற்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**4)** 9, 10, 11, 13ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரை இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

**5)** இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் இந்த மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு 2வது சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அப்போது தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் போக இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணம் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும் மேற்படி ஆவணம் அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணமாக உள்ளதால் மேற்படி ஆவணத்தை கால தாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து உத்திரவிட வேண்டியது அவசியமாக உ ள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. 1 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு பாரா 2ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அசல் வழக்கை காலதாமதப்படுத்துவதற்காக பொய்யாக சொல்லப்பட்ட சங்கதிகள் என்றும் இந்த மனுதாரர் ஏற்கனவே விசாரணை செய்யப்பட்டு அதற்கான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அசல் வழக்கின் 2ம் பிரதிவாதி ஆவணங்களை குறியீடு செய்யாமல் இருந்துவிட்டு இவ்வழக்கினை திசை திருப்புவதற்காகவும் நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதற்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு இரு தரப்பிலும் கூறப்பட்டுள்ளதன்

அடிப்படையில் இந்த மனுவினை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது மேற்படி ஆவணம் ஏற்புடையதா இல்லையா என்பதை அசல் வழக்கில் முழு விசாரணைக்கு பின்பு முடிவு காண வாய்ப்புள்ளது. இந்நிலையில் மனுதாரர் தரப்பில் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்று கூறப்பட்டுள்ளதையும் மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்று கூறப்பட்டுள்ளதையும் கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும் விதமாக இந்த மனுவினை அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என முடிவு செய்கிறது. இருந்த போதிலும் இந்த மனுதாரரால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காலதாமதத்தை ஈடுகட்டும் வகையில் இந்த மனுவினை செலவுத் தொகையுடன் அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு நிபந்தனையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் செலவுத் தொகையாக ரூ.250/—யை 1 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பிற்கு செலுத்த வேண்டும் என்றும் தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணிணியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு- சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.